

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் திண்டுக்கல் மரியநாதபுரத்தில் நடைபெற்ற விழாவில் திண்டுக்கல் மாவட்டத்தில் ரூ.2.62 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 9 மருத்துவ கட்டடங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து, பயனாளிகளுக்கு மகப்பேறு மருத்துவ பெட்டகத்தை வழங்கினார்கள். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, பழனி சட்டமன்ற உறுப்பினர் இ.பெ.செந்தில்குமார். வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்திராஜன் உட்பட பலர் உள்ளனர்.

### மாடம்பாக்கம் ஆ.நடராஜன் தலைமை! தாம்பரம் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில்

# முதல்வர் பிறந்தநாள் விழா! நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டம்!

## டி.ஆர்.பாலு எம்.பி - அமைச்சர் தா.மோ.அன்பரசன் - சேலம் சுஜாதா - நாகம்மை கருப்பையா சிறப்புரை!

காஞ்சிபுரம், மார்ச். 17

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழாவை மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டம் இன்று (17.3.2024 ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணிக்கு, மாடம்பாக்கம், எம்.ஜி.ஆர். நகர், பாரத் பல்கலைக் கழகம் அருகில் நடைபெறுகிறது.

தாம்பரம் கிழக்கு பகுதிச் செயலாளர் மாடம்பாக்கம் ஆ.நடராஜன் தலைமை வகிக்கிறார்.

இ.எம்.சாம்சன், எம். பெருமாள் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

பொன்.சதாசிவம், வி.ஜெயராமன், டி.ராஜாராம், எஸ்.விமலா, ரா. நவீன், ஆர்.பன்னீர்செல்வம், ஜெ.செல்வம், எஸ். வேலவன், பொ.செந்தில்குமார், ரமாதேவி செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி, மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமை கழக பேச்சாளர்கள் சேலம் சுஜாதா, நாகம்மை கருப்பையா ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் எஸ். ஆர்.ராஜா எம்.எல்.ஏ, இ. கருணாநிதி எம்.எல்.ஏ, தொகுதி பார்வையாளர் என்.மருதுகணேஷ், மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், எஸ். சேகர், த.ஜெயக்குமார், ஆதிமாறன், எஸ்.இந்திரன், இரா.சுரேஷ், அ.தமிழ்மாறன், வ.விஜயரங்கன், எஸ். சதீஸ், கோ.தேவேந்திரன், ஆர்.எஸ்.சங்கர், கோல்டு டி.பிரகாஷ், பேராசிரியர் எல்.பிரபு, சி.கே.ஜெகதீஸ்வரன்,

டி.புருஷோத்தமன், ஜெ.சத்தியசீலன், எம்.கண்ணன் (எ) சாந்தகுமார், எம். கே.மோகனரங்கன் மற்றும் நகர, பேரூர், வட்டக் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

மாநகரப் பிரதிநிதி எம். செந்தில்குமார் நன்றி கூறுகிறார்.

### முதல்வர் பிறந்த நாள்: இரா.துரைராஜ் எம்.சி. - எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி. முன்னிலையில்

# சைதை 170 அ வட்டத்தில் பொதுக்கூட்டம்: 2000 நபர்களுக்கு நல உதவிகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை! கோட்டூர் கோ.சண்முகம் ஏற்பாட்டில்!

சென்னை, மார்ச் 17 -

சென்னை தெற்கு மாவட் டம் சைதை கிழக்கு பகுதி 170(அ) வட்ட தி.மு.க . சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் 71 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, வட்டச் செயலாளர் கோட்டூர் கோ. சண்முகம் ஏற்பாட்டில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் மகளிர்கள் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் 2000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப் பட்டன.

தமிழ்நாடு முதலமைச்சர் , கழக தலைவர் அவர்களின் 71வது பிறந்தநாளை முன்னிட்டு சைதை கிழக்கு பகுதி 170அ வட்ட கழக செயலாளர் கோட்டூர் கோ.சண்முகம் ஏற்பாட்டில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டம் 15.03.2024 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு பொன்னியம்மன் கோயில் தெரு, கோட்டூர் மார்க்கெட் அருகில் வட்டக் கழகச் செயலாளர் கோட்டூர் கோ.சண்முகம் தலைமையில் சைதை கிழக்கு பகுதிச் செயலாளர் 13வது வார்டு குழு தலைவர் இரா.துரைராஜ், சைதை மேற்கு பகுதி செயலாளர் 10வது வார்டு குழு தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, ஆகியோர் முன்னிலையில் 2000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி நடைபெற்ற பொதுக்கூட்டம் நடை பெற்றது.

இதில் 170வது வட்டச் செயலாளர் கோட்டூர்புரம் க.மணி மற்றும் 170வது வட்டச் செயலாளர் கழக நிர்வாகிகள் மு.பலராமன், ஏ.விக்டோ ரியா அன்பு க.ராஜன், சி.எல்.ஆர்.பழனி, கே.கோவிந்தராஜுலு, ப.தினகரன், ச.கோபு, எம். வெங்கடேசன், வி.ரமேஷ், ச.கங்காதரன், கே.ரகு, க. பார்த்திபன், வே. .முருகன், எஸ்.ராஜா, ட.வெற்றிசெல்வன், தேவா, 170 வட்ட கழக நிர்வாகிகள் கே.பன்னீர்செல்வம், கே.அரிபாபு, எஸ்.ராஜா, ஏ.கே.என்.உதயகுமார், ஜி. மேனகா, கு.சந்திரன், பூமிநாதன், எஸ்.பிரகாஷ், பி.நந்தகுமார், ஏ. கருணா கரன், த.ராஜா, ஜி.பாஸ்கர், கே.கேசவன், ஜேம்ஸ்குமார், .தரணி, ஜி.சுகுமார், எம்.ரமணி, இ.வினோ த்குமார், எஸ். ஆறுமுகம் ஆகியோர் வரவேற்றுப் பேசினர்.

மாவட்டச் செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நலவாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், வட்டத்தில் அனைத்துப் பகுதி மகளிர் பங்கேற்று நடைபெற்ற கோலப் போட்டி, இசை நாற்காலி போட்டி, வண்ணத் தண்ணீர் நிரப்புதல் மற்றும் எலுமிச்சை பழம் ஸ்பூன் வைத்து ஓட்டப்பந்தயம் உள்ளிட்ட போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றவர்களுக்கு குளிர் சாதன பெட்டிகள், சலவை எந்திரங்கள், கிரைண்டர், மிக்சி. , மின்விசிறிகள் மற்றும் கலந்து கொண்டு அனைத்து பெண்களுக்கும் ஆறுதல் பரிசுகளையும் மேலும் 2000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கி சிறப்புரையாற்றினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், பகுதி செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி. ஆகியோர் உரையாற்றினர் மாவட்ட அவைத்தலைவர் எஸ்.குணசேகரன், பொதுக் குழு உறுப்பினர் சைதை மா.அன்பரசன், சைதை கிழக்கு பகுதி நிர்வாகிகள் இ.முருகேசன், மு.பாக்கிய லட்சுமி கழக பேச்சாளர்கள் சைதை சாதிக், க.ஒப்பிலாமணி, கோ.தனசேகரன் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ். பிரகாஷ் மாவட்ட பிரதிநிதிகள் கோட்டூர் ந,பாபு, எஸ். ஜெ.சலாம், மு.மகேஷ்லாரன்ஸ், கே.எம்.எஸ்.கணேசன் அணிகளின் மாவட்ட மற்றும் பகுதி நிர்வாகிகள் ஆர்.சேதுராமன் , எஸ்.புவனேஸ்வரி, ஏ.பார்வதி, க.சுப்பிரமணி வழக்கறிஞர் .முத்துச்சாமி எஸ்.ரமேஷ் மு.ராமு ஜெ.கௌசல்யா, ஏ. முகமதுரிஸ்வான், எஸ்.ஆல்பர்ட் , சைதை கிழக்கு பகுதி இளைஞர் அணி நிர்வாகிகள் கொடி கே.பாலா கோ.ராஜன் மற்றும் அணிகளின் மாவட்ட மற்றும் பகுதி நிர்வாகிகள், சார்பு மன்ற நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், பாக முகவர்கள் மற்றும் பாக பணியாளர்கள் பெரும் திரளாக கலந்து கொண்ட கூட்டத்தில் வட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

எஸ்.கர்ணன் எம்.குமார் பா.சிவலிங்கம் ஆர்.நரசிம்மன் ஆகியோர் நன்றி கூறினர்.



சைதை மேற்குபகுதி 140வது (அ) வட்ட திமுக சார்பில் கழகதலைவர் தமிழக முதல்வரின் 71வது பிறந்தநாளை முன்னிட்டு பழைய மாம்பலம் ரோடு கிருஷ்ணப்பநாயக்கன் தெரு சந்திப்பில் பகுதி பிரதிநிதி சைதை எஸ்.பஷீர் தலைமையிலும் பகுதிசெயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., வட்டகழக செயலாளர் ந.தமிழரசு, முன்னிலையில் 571 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி தெருமுனைக்கூட்டம் நடைபெற்றது. அரசு கொறடா கோவி.செழியன் எம்.எல்.ஏ., முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.எல்.ஏ. ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்கள். சைதை மா.அன்பரசன், மின்னல் கந்தப்பன், களக்காடி எல்லப்பன், த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதா கௌதமன், வி.பி.ஜானகிராமன், சை.மு.சேகர், அட்கோகமலநாதன், எஸ்.பி .கோதண்டம், எம்.நாகா, சைதைசாதிக், அஞ்சல் ராமன், கு.புகழ்வேந்தன், டி.என். சிவமணி, ஆர்.எல்.செல்வம், பொ ன்ஜெய்சிங், ஜி.கே.ராமச்சந்திரன், பால்கார்ரவி உள்ளிட்ட வட்டகழக நிர்வாகிகள், கழகதோழர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



மக்கள் முதல்வரின் மனிதநேயத் திருவிழா சூரியச்சுடர் 41வது நிகழ்ச்சி வட்டச் செயலாளர் எஸ்.சசிகுமார் தலைமையில் ஓட்டேரியில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தாயகம் கவி எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் 1500 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மேயர் பிரியா, கலாநிதி வீராசாமி எம்.பி., பி.எம்.யாழினி ஆகியோர் வழங்கி சிறப்பித்தனர். உடன் எம்.சாமிகண்ணு, செ.தமிழ்வேந்தன், சரிதா மகேஷ்குமார் எம்.சி., இசட் ஆசாத் எம்.சி., புனிதவதி எத்திராசன் எம்.சி., டி.லோகேஷ், பி.உதயசங்கர், நா.துலுக்காணம், எம். பெரோஸ்கான், கா.ராஜ்முகமது, தமிழ்செல்வி சசிகுமார் எம்.சி., ரமணி லோகேஷ் எம்.சி., பி.ஜெ.துளசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. தலைமை! சென்னை வடக்கு மாவட்ட

# அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்தாய்வுக் கூட்டம்!

## முன்னிலை : ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர், வழக்கறிஞர் ஏ.சரவணன், என்.நவீன், நந்தனம் நம்பிராஜன் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 17-

சென்னை வடக்கு மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்தாய்வு கூட்டம் என்னுடைய தலைமையில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஐட்ரீம் ஆர்.மூர்த்தி,ஜே. ஜே.எபினேசர், தொகுதி பொறுப்பாளர்கள் வழக்கறிஞர் ஏ.சரவணன், என். நவீன், நந்தனம் நம்பிராஜன் முன்னிலையில்

எண்.1,முதல் பிரதான சாலை, சர்மா நகர் (எனது அலுவலகம்) விலாசத்தில்

14-03-2024 மற்றும் 15-03-2024 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.

கூட்டத்தில் கழக அரசின் சாதனைகளை விளக்கி துண்டுப்பிரசுரங்கள் வழங்குவது, OMR படிவம் பூர்த்தி செய்வது போன்ற பணிகளை பகுதி கழகத்தோடு இணைந்து பணியாற்ற வேண்டும் என்றும் வருகின்ற நாடாளுமன்ற தேர்தலை அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றி தலைவர் கரத்தை வலுப்படுத்த வேண்டும் என்றும் மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் ஆலோசனை வழங்கினார்.

கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள் அவைத்தலைவர் இரா.வெற்றிவீரன் துணைச்செயலாளர்கள்:எஸ்.ஆர்.கமலக்கண்ணன், மு.கோபி, நாகம்மை கருப்பையா பொருளாளர்: வி.தயாளன், பகுதி செயலாளர்கள்: க.ஜெயராமன் அ. முருகன், வ.பெ.சுரேஷ், இரா. செந்தில்குமார், ஜெபதாஸ் பாண்டியன், இரா. லட்சுமணன் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: வெ.சு. சத்தியநாராயணன் மாணவர் அணி, லட்சுமிவேலு மகளிர் அணி, விமலா மோகன் மகளிர் தொண்டர் அணி, க.கோவிந்தசாமி விளையாட்டு மேம்பாட்டு அணி, வி.கலைவாணன் மருத்துவ அணி, டி.சுரேந்தர் மருத்துவ அணி (இராயபுரம்), ஜான் பீராங்கிளின் மருத்துவ அணி (ஆர்.கே. நகர்), மோ.தீனதயாளன் சுற்றுசூழல் அணி, கார்த்திக் செங்குட்டுவன் நெசவாளர் அணி, எஸ்.சண்முகம் அமைப்புசாரா ஓட்டுநர் அணி, சி.மணிகண்டன் இலக்கிய அணி, லியோ டி. சுரேஷ் பொறியாளர் அணி, ஜெ.காணிக்கை நாதன் வழக்கறிஞர் அணி, மு.அப்துல் ரஹ்மான் சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, எ.டி. மணி அயலக அணி, எஸ்.எம். பரசுராம் தொழிலாளர் அணி, கோ.சதீஸ் (எ) ராஜசேகர் கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை, கே.கலையரசன் தொண்டர் அணி, பி.சதீஷ்குமார் மீனவர் அணி, பா.பிரகாஷ் வர்த்தகர் அணி, ஆ.ரமேஷ் பாபு தகவல் தொழில் நுட்ப அணிமற்றும் மாவட்ட தலைவர்கள், துணை தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

# பூந்தமல்லியில் ரூ. 6 கோடி மதிப்பில் நவீன விளையாட்டு அரங்கம்!

## ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார்!

திருவள்ளூர் மார்ச் 17;

திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பூந்தமல்லி நகராட்சி பேரறிஞர் அண்ணா பள்ளி வளாகத்தில் 3 ஏக்கர் பரப்பளவில் ரூ. 6 கோடி மதிப்பில் நவீன விளையாட்டு அரங்க கட்டுவதற்கு ஆ.கிருஷ்ணசாமி எம்எல்ஏ தலைமை தாங்கி பணிகளை துவக்கி வைத்து அடிக்கல் நாட்டினார்

பூந்தமல்லி பகுதியில் மாணவர்கள், விளையாட்டு வீரர்கள், பொதுமக்கள் பயன்படும் வகையில் மிகப் பெரிய விளையாட்டு அரங்கம் வேண்டும் என்று ஆ.கிருஷ்ணசாமி எம்எல்ஏ நீண்ட காலமாக கோரிக்கை வைத்து வந்தார். இது தொடர்பாக பல்வேறு துறை அதிகாரிகளை நேரில் சந்தித்து மனு கொடுத்தும் வலியுறுத்தி வந்தார்.

இந்த நிலையில் சென்னை பெருநகர வளர்ச்சி குழும நிதியிலிருந்து விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதைடுத்து பூந்தமல்லி அறிஞர் அண்ணா ஆண்களை மேல் நிலைப் பள்ளி வளாகத்தில் நவீன வசதிகளுடன் புதிய விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டு விழா நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு நகர செயலாளர் ஜி.ஆர்.திருமலை நகர் மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர், துணைத் தலைவர் க.ஸ்ரீதர், சென்னை பெருநகர வளர்ச்சி குழும செயற்பொறியாளர் ராஜன்பாபு, கண்காணிப்பு பொறியாளர் பாலமுருகன், தலைமை பொறியாளர் ரவிக்குமார், நகர் மன்ற உறுப்பினர் தீபா யுவராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநில ஆதிதிராவிட நலக்குழு செயலாளரும் பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி தலைமை தாங்கி விளையாட்டு அரங்கம் அமைக்க அடிக்கல் நாட்டில் துவக்கி சிறப்புரையாற்றினார் அப்போது

பூந்தமல்லி அறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் 3.021 ஏக்கர் பரப்பளவில் ரூ. 6 கோடி மதிப்பில் அமைய உள்ள இந்த ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகத்தில் உள்விளையாட்டு அரங்கம், பூப்பந்து மைதானம், உட்புற விளையாட்டு பகுதி, உட்புற உடற்பயிற்சி கூடம், யோகா மையம், ஓடுதளம், கால்பந்து மைதானம், பாத சாரிகள் நடைபாதை, பொது பிளாசா பகுதி, ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பறை வசதி, சிசிடிவி கேமரா வசதி, மின்சார வசதி உள்ளிட்ட பல்வேறு நவீன வசதிகளுடன் அமைக்கப்பட உள்ளது. பணி தொடங்கிய நாளிலிருந்து 9 மாத காலத்திற்குள் இந்த விளையாட்டு அரங்கம் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது என தெரிவித்தார் இதில் திமுக நகர நிர்வாகிகள் பூவை தாஜுதீன், துரை பாஸ்கர், அப்பர் ஸ்டாலின், டில்லி ராணி மலர்மன்னன், அசோக் குமார், ஜெ.சுதாகர், புண்ணியகோட்டி, அன்பழகன், சௌந்தர்ராஜன், நெல்சன் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள், வட்ட நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# அறந்தாங்கியில் புதிய திட்டப்பணிகள்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்து அடிக்கல் நாட்டினார்!

புதுக்கோட்டை மார்ச் 17-

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கீரமங்கலம் பேரூராட்சிப் பகுதிகளில், சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 14.03.2024 அன்று மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி, பல்வேறு முடிவுற்ற திட்டப்பணி களை திறந்து வைத்து, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

பின்னர் அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் தெரிவித்ததாவது;

கிராமப்புறங்களில் வாழும் பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளை நிறை வேற்றுவதற்காக, சாலை வசதி, குடிநீர் வசதி, மின்விளக்கு வசதி உள்ளிட்டவைகள் மேம்படுத்தப் பட்டு வருகிறது. அதன்படி, இன்றையதினம் திருவரங்குளம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றி யங்கள் மற்றும் கீரமங்கலம் பேரூராட்சிப் பகுதிகளில், மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி களை வழங்கி, பல்வேறு முடிவுற்ற திட்டப்பணி களை திறந்து வைத்து, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அதன்படி, திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், பாத்தம்பட்டியில், ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில், புதிய மின்மாற்றியினையும் மற்றும் கீரமங்கலம் பேரூராட்சி, காசிம் புதுப்பேட்டை பகுதியில், புதிய மின்மாற்றியினையும் மற்றும் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், செரியாளூர் கிழக்கு பகுதியில், புதிய மின்மாற்றியினையும் முடிவுற்றத் திட்டப் பணிகள் துவக்கி வைக்கப்பட்டது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.



ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருநின்றவூர் ஆவடி திருமுல்லைவாயல் நடுக்குத்தகை கருணாகரசேரி திருவேற்காடு ஆகிய பகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி மற்றும் பல்வேறு நிதியிலிருந்து 3 கோடியை 75 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் சாலை அமைக்க பணி புதிய பள்ளி கட்டிடம் இசேவை கட்டிடம் காரிய மேடை கட்டிடம் கட்டுமான பணி புதிய அங்கன்வாடி துவக்க விழா பணிகளை முன்னாள் அமைச்சரும் மாவட்டச் செயலாளர் ஆவடி சாமு.நாசர் எம்.எல்.ஏ துவக்கி வைத்தார் உடன் மேயர் ஜி.உதயகுமார், கே.ஜெ.ரமேஷ், பிரபு கஜேந்திரன், சன்.பிரகாஷ், டி.தேசிங்கு, ஜி.ராஜேந்திரன், அமுதாபேபிசேகர், என்.இ.கே.மூர்த்தி, பேபிசேகர், எஸ்.ஜெயபாலன், பா.நரேஷ்குமார், ஜெ.மகாதேவன், பி.எல்.ஆர்.தேவியோகா, ஆர்த்திபிரபு, எஸ்.சங்கர், யமுனாரமேஷ், என்.லட்சுமி, நேமிலி சுரேஷ்குமார், சந்தோஷ், எம்.கிருஷ்ணன், சாந்திபாபு, ஸ்ரீதேவி, சத்யாரவி, ஜெய்பிரியா சரவணன், ராஜி, இளங்கோ, செல்வி ராஜேந்திரன், நடுகுத்தகை கே.சுரேஷ்குமார், வி.தியாகராஜன், ஆர்.செந்தாமரை, எம்.மோகன், எஸ்.கமலக்கண்ணன், அன்பழகன், நாகராஜ், ரவி, குணாசேகர், பா.கந்தன், ஆர்.பிரவீன்குமார், அக்னிராஜேஷ், சாது, பா.பன்னீர்செல்வம், ஜெ.சரவணன், செல்லதுரை, உள்பட பலர் கலந்து கொண்டார்கள்